**செய்தி வெளியீடு எண்:128** **நாள்:16.02.2021**

**இன்று (16.2.2021) சென்னையில் தொழில்துறை சார்பில் நடைபெற்ற "வெற்றிநடை போடும் தமிழகம், தொழில் வளர் தமிழகம்" நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**

இந்த சிறப்பான நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பா. பெஞ்சமின் அவர்களே!

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. ராஜீவ் ரஞ்சன் அவர்களே!

தமிழ்நாடு அரசின் ஆலோசகர் திரு. க. சண்முகம் அவர்களே!

சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றுள்ள இங்கே சிறப்பாக உரையாற்றிய மரியாதைக்குரிய திரு.வேணு ஸ்ரீனிவாசன் அவர்களே!

டாடா குழுமத்தின் பிரதிநிதி திரு. பன்மாலி அக்ரவாலா (Banmali Agrawala)அவர்களே!

Business Today நிர்வாக ஆசிரியர் திரு.ராஜீவ் தூபே அவர்களே!

தொழில் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை முதன்மைச் செயலாளர் அவர்களே!

இந்த இனிய விழாவில் பங்கேற்றுள்ள வெளிநாடுகளின் துணைத் தூதர்களே!, பிரதிநிதிகளே!

சிறப்பான ஒத்துழைப்பு நல்கிக் கொண்டிருக்கும் தொழில் முதலீட்டாளர்களே!

அரசு உயர் அலுவலர்களே!

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

சிறப்புமிக்க '**தொழில்வளர் தமிழகம்**' விழாவிற்கு வருகை புரிந்துள்ள உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசின் திறமையான செயல்பாடுகளால் பல்வேறு துறைகளிலும், இந்தியாவின் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு முதலிடம் பெற்றுதிகழ்கிறது. **"துறைகள்தோறும் புதிய உயரங்கள் பல தொட்டு, தமிழ்நாட்டின் வெற்றி நடை தொடர வேண்டும்"** என்ற முழு முனைப்போடு அரசு செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு அம்மா மற்றும் மாண்புமிகு அம்மாவின் அரசால், மின்மிகை மாநிலமாகவும், நீர்மிகை மாநிலமாகவும், சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ள மாநிலமாகவும், உலகத்தர உட்கட்டமைப்பு உள்ள மாநிலமாகவும் என்று தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. இன்று தொழில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் சரணாலயமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

**"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
**அருமை உடைய செயல்"**

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, தமிழ்நாடு அரசின்

சிறப்பான நடவடிக்கைகளால் **"புதிய தொழில் துவங்க உகந்த மாநிலம் தமிழ்நாடு"** என்ற அசைக்க முடியாத நம்பிக்கை தொழில் துறையினரிடம் பெற்றுள்ளது. இந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் விதமாக இன்றைய விழா சிறப்பாக அமைந்துள்ளது.

இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு, உலக அரங்கில் தமிழ்நாட்டை,

- தொழில் துறை முதலீடுகளுக்கு ஏற்ற மாநிலமாக மேலும் வலுப்படுத்தும் வகையிலும்,
- உலகத் தொழில்களை ஈர்க்கும் வகையிலும்,
- சிறப்பான நம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி ஊக்கமளித்து மேம்படுத்தும் வகையிலும், **இரண்டு புதிய தொழில் கொள்கைகளை** இன்று அறிமுகப்படுத்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.
- முதலீடு, புத்தாக்கம் மற்றும் உற்பத்தி தொடர்புடைய சேவைகளை உருவாக்குவதில் உலக அளவில் முன்னணி மையமாக தமிழ்நாட்டை உருவாக்குவதும்,
- 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து, 20 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும்,

  உற்பத்தித் துறையில் ஆண்டுக்கு 15 சதவீதம் வளர்ச்சியை அடைந்திடவும்,
- மீண்டும் புதிய வெற்றிப் பயணத்தை துவக்குவதும்,

  **தமிழ்நாடு தொழில் கொள்கை 2021**– இன் நோக்கம் ஆகும்.

அதேபோல,

- வளர்ச்சியை பரவலாக்கிடவும்,
- சோதனைகளை சாதனையாக்கும் திறமை நிறைந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மேலும் ஊக்குவிக்கவும்,
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் 2 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்து 20 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கொள்கை 2021.**

தமிழ்நாடு அரசின் இந்த புதிய கொள்கைகள், வளர்ந்து வரும் துறைகளான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உபகரணங்கள் உற்பத்தி, உணவு பதப்படுத்துதல் போன்ற துறைகளுக்கு, புதிய தொழில் கொள்கைகள் கூடுதல் ஊக்கமளிக்கின்றன. புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சித் துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு உருவாக்கத்தினை அதிகரிக்கவும், குறிப்பாக மாற்றுத் திறனாளிகள், பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு வழங்கப்படும் வேலைவாய்ப்புகளுக்கு கூடுதல் சலுகைகள் வழங்கும் வகையிலும் தொழில் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. சீரான தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க **“தென்மாவட்டங்கள் மற்றும் தர்மபுரி, பெரம்பலூர், நாகப்பட்டினம் உள்ளிட்ட தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்கள் என 22 மாவட்டங்களில் தொழில் துவங்குபவர்களுக்கு**

**50 சதவீதம் சலுகை விலையில் நிலம், உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கும் வகையில் தொழில் கொள்கை அமைந்துள்ளது.''**

**கடந்த 10 ஆண்டு காலகட்டத்தில் 6.85 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கான புதிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.** அதிலும் குறிப்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 2014–ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தொழிற் கொள்கையின் விளைவாக, கடந்த ஆறு ஆண்டுகளில் மட்டும் ரூபாய் 6.50 இலட்சம் கோடி அளவிற்கு புதிய முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. **தொழிற்சாலைகள் எண்ணிக்கை, தொழிற்சாலை பணியாளர்கள் எண்ணிக்கை ஆகியவற்றில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகித்துக் கொண்டிருக்கிறது.**

2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் **மாநாட்டுகளில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 81 சதவீதம் பல்வேறு நிலைகளில் செயல்பாட்டில் உள்ளன.**

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிநின்று சாதனைகள் பல படைத்து வரும் எனது தலைமையிலான தமிழ்நாடு அரசு வெளியிடும் இந்த புதிய கொள்கைகளும் சாதனைகள் பல படைத்து சரித்திரத்தில் இடம்பிடிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டின் தொழில் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை கொரோனாகால பொருளாதார பாதிப்பிலிருந்து மீட்டெடுக்க **"அவசரகாலக் கூடுதல் கடன் திட்டம்''** செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை தமிழ்நாட்டைச் சார்ந்த 3,66,619 குறு, சிறு

மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் **13.5** ஆயிரம் கோடிகடன் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த இனிய விழாவில், தமிழக தொழில் துறை மேம்பாட்டில் ஐம்பது ஆண்டுகளாக பெரும் பங்கு வகித்து பொன்விழா கண்டு சாதனை படைத்துவரும் சிப்காட் மற்றும் சிட்கோ நிறுவனங்களின் அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**“பொன்விழா கொண்டாட்டங்களின் அடையாளமாக, சிட்கோவின் முதல் தொழில் பூங்காவான கிண்டி தொழில் பூங்காவில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பொன்விழா நினைவு வளைவு ஒன்று அமைக்கப்படும்**” என அறிவிப்பதில் பெருமை கொள்கிறேன்.

200 கோடி ரூபாய் திட்டமதிப்பீட்டிலான **6 புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள்** அமைக்கவும், **150** கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான **இரண்டு அடுக்குமாடி தொழிற்கூட தொகுப்பு கட்டடங்கள் கட்டவும்** இன்று **அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.** குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் வணிகம் மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைப்பின் புதிய முத்திரை வெளியிடப்பட்டு, இணையதளம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சிப்காட் நிறுவனத்தின் மூலம் **மணப்பாறை, மாநல்லூர், ஒரகடம் மற்றும் தர்மபுரி** ஆகிய இடங்களில் 3,977 ஏக்கர் பரப்பளவில் புதிய **தொழில் பூங்காக்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.**

இன்று துவக்கப்படும் **சிப்காட் புத்தாக்கமையமானது,** தொழில் பூங்காக்களில் நவீன ஆய்வு மற்றும் புத்தாக்கங்களுக்கான வாய்ப்புகளை

உருவாக்கி, இளம் கண்டுபிடிப்பாளர்களை தொழில் நிறுவனங்களுக்கு மேலும் நெருக்கமாக அழைத்துச் செல்வதில் பெரும் பங்காற்றும். இந்தப் புத்தாக்க மையங்கள், சிப்காட் தொழிற் பூங்காக்களை, உலக தரத்திற்கு மேம்படுத்த, மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் முக்கிய மைல்கல்லாகும்.

கோயம்புத்தூர் மாநகரில் இன்று துவங்கப்பட்டுள்ள **"டைசல் உயிரி தொழில்நுட்பப் பூங்கா"** மூலம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும். உயிரி தொழில்நுட்பத் துறை மேம்பாட்டிற்கு, அரசு அளித்து வரும் தொடர் ஊக்கத்திற்கு சான்றாக இந்த தொழில் பூங்கா அமைந்துள்ளது.

முதலீடுகளை ஈர்ப்பதற்கும், பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார தாக்கத்தை தணிப்பதற்கும் அமைக்கப்பட்ட தலைமைச் செயலாளர் தலைமையிலான குழுவின் அறிக்கையின்படி, பிற நாடுகளில் இருந்து இடம் பெயர உள்ள முதலீட்டு திட்டங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளம் மூலமாக 38 துறைகளின் 190 அனுமதிகள் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனது தலைமையிலான உயர்நிலைக் குழு, ஒவ்வொரு முதலீட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் தொடர்ந்து ஆய்வு செய்து, தேவையான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. அனுமதிகள் வழங்குவதில் ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், அவற்றுக்கு உடனுக்குடன் உயர்மட்ட குழு கூட்டத்திலேயே தீர்வு காணப்பட்டு அனுமதிகள்

வழங்கப்படுகின்றன. **“பிரச்சனை வந்தால் முதலமைச்சரே தலையிட்டு விரைவாக தீர்த்து வைப்பார்”** என்ற நம்பிக்கை முதலீட்டாளர்களிடையே புதிய உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கோவிட் தொற்று பாதிக்கப்பட்ட காலத்தில் மட்டும், **60,674 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 1,00,721 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 73 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவை தவிர இன்று 28,053 கோடி ரூபாய் முதலீட்டில் 68,775 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மேலும் 28 புதிய தொழில் திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.**

**இன்று வெளியிடப்பட்டுள்ள, புதிய தொழில் கொள்கைகளின்** அடிப்படையில், மேலும் மேம்படுத்தப்பட்ட **புதிய வானூர்தி மற்றும் பாதுகாப்பு தொழில் கொள்கையும், புதிய ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கையும் விரைவில்** வெளியிடப்படும். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மாவின் அரசால் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்காக **சிறப்பான அறிவிப்புகள் சிலவற்றை வெளியிடுவதில் பெருமை கொள்கிறேன்.**

> **“தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான ரூபாய் 500 கோடியில் மூலதன நிதியம் 500 கோடி ரூபாய் உருவாக்கப்படும்.”**

> **“தகுதிவாய்ந்த தொழில்களுக்கு, முதல் 4 ஆண்டு காலம் வரையில் செயல்பட தேவையான முக்கிய அனுமதிகளுக்கு விலக்களிக்கும் “FastTN” திட்டம். வாகன உற்பத்திக்கு**

**ஊக்கமளிக்க புதிதாக உருவாக்கப்படும் மாதிரி வாகனங்களை பதிவு செய்வது எளிதாக்கப்படும்.''**

**''குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த முதலீட்டு மானியம் 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக 50.00 இலட்சம் ரூபாய் வரை, என தற்போது வழங்கப்பட்டு வருகிறது. இனி, இது மூன்று மடங்கு உயர்த்தப்பட்டு 1.5 கோடி ரூபாய் வரை குறு, சிறு, நடுத்தரத் தொழில்களுக்கு மானியம் வழங்கப்படும்.''**

**''குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருங்கால வைப்பு நிதிக்கு நிறுவனங்களின் பங்களிப்பாக செலுத்தப்படும் தொகையில் ஆண்டொன்றிற்கு ஒரு பணியாளருக்கு அதிகபட்சமாக 24,000 ரூபாய்க்கு மிகாமல் முதல் மூன்று ஆண்டுகளுக்கு மானியமாக அரசு வழங்கும்.''**

**''தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு 1949–இல் இருந்து பெரும் பங்காற்றி வரும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தினை மேலும் வலுப்படுத்தும் விதமாக 1000 கோடி ரூபாய் நிதியை அரசு வழங்கும்.''**

அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கியது, தொழில் வளர்ச்சிக்காக பின்தங்கிய பகுதிகளில் தொழில் துவங்கியது என **சிறப்பாக சாதனை படைத்த பல நிறுவனங்களுக்கு Business Today விருது**

**வழங்கப்பட்டுள்ளது.** மிகுந்த அர்ப்பணிப்பாலும் அயராத உழைப்பாலும் உயர்ந்த சாதனைகள் பல படைத்துள்ள, தொழில் துறையின் ஆணிவேராக விளங்கும் தொழில் முனைவோர் பலருக்கு இன்று விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. **விருது பெற்ற நிறுவனங்களுக்கும், தொழில் முனைவோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.**

உங்கள் அனைவரின் பங்களிப்பாலும், மாண்புமிகு அம்மாவின் அரசின் சீரிய திட்டங்களாலும், அனைத்துத் துறைகளையும் போல, தொழில்துறையிலும் வெற்றி நடைபோட்டு சாதனைகள் பல படைத்து வருகிறது தமிழகம்.

இன்று அறிவிக்கப்பட்டுள்ள தொழில் கொள்கையின் பலன்களை முழுமையாக பயன்படுத்தி தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் துவங்கி அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்க இந்நேரத்தில் உங்கள் அனைவரையும் நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஒரு முக்கியமான நாள், எனக்கு மகிழ்ச்சியான நாள். என்னுடைய அரசு நான்காண்டுகள் நிறைவு பெற்று ஐந்தாவது ஆண்டு அடியெடுத்து வைக்கின்ற நாள். இந்த நன்னாளில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாநில வளர்ச்சியில் உங்களது பங்களிப்பு அளப்பறியாதது. ஒரு மாநிலம் வளர்ச்சியடைய வேண்டுமென்றால், தொழில் நிறைந்த மாநிலமாக விளங்க வேண்டும். அப்படி தொழில் நிறைந்த மாநிலமாக விளங்குவதற்கு உங்களுடைய ஒத்துழைப்பு மிகமிக அவசியம் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, மிகச் சிறப்பாக இன்று எனது தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு தொழில் துறைக்கு

முழுமையான வழிகாட்டுதல்களையும் ஆதரவையும் தொடர்ந்து அளித்து, உங்கள் அனைவரின் வெற்றிக்கும் உறுதுணையாக என்றென்றும் இருக்கும் எனக் கூறி, உங்கள் அனைவரையும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம் !!

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**